**கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2021**

------------------------------------------------------------------------------------

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என தற்போது அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஐஐ ஆம் உறுப்புரையின் 4(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றுதல் அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நல்ல நிலையை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 4,060 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,191 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 வரை பொதுத் திறைசேரியால் செய்யப்பட்ட ரூபா 2,122.25 மில்லியன் தொகையான சமநிலை சீராக்கல் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதிக்கூற்றுக்கள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சமநிலை சீராக்கல் கணக்கிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| பெடிக் வழிகாட்டலின் 14.7 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டம் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் பெற்ற பின்னர் 56 நாட்களிற்குள் பட்டியல் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்த விலைப்பட்டியல் கொடுப்பனவின் தீர்ப்பனவின் தாமதம் காரணமாக செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 4.5 மில்லியன் தொகையான தண்டப் பணங்களைச் செலுத்தியிருந்தது. | 2019 பாதீட்டு நடவடிக்கை திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டவாறு நீர் வழங்கல் அமைச்சிடமிருந்து ரூபா 5,763 மில்லியன் IPC கொடுப்பனவிற்கு தேவைப்பட்ட நிதிகள் பெறப்பட்டிருக்கவில்லை. ஆகவே, பொதி 02 இன் கீழான IPC 18 மற்றும் 19 மற்றும் பொதி 03 இன் கீழான IPC 20, 21, 22 மற்றும் 23 என்பவற்றின் கொடுப்பனவு தாமதப்பட்டிருந்தது. | அமுலாக்கல் மற்றும் நிறைவேற்றல் முகவர்களான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் நீர் வழங்கல் அமைச்சு என்பன தாமதமில்லிமல் IPC பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. பௌதீக செயலாற்றல்

4.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| நடவடிக்கைகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் | உள்ளபடியான செயலாற்றல் | | |
| (அ) வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்<br>- உட்பகுதி கழிவு வலையமைப்பு<br>- திறந்த வெளி<br>- அகழி<br>- கிளைக் கழிவு வலையமைப்பு<br>- திறந்த வெளி<br>- அகழி<br>- வீட்டுக் கழிவு வலையமைப்பு<br>- திறந்த வெளி<br>- அகழி<br>- பதவியணி பராமரிப்பு<br>- திறந்த வெளி<br>- அகழி<br>- ஆட்புல இறைக்கும் இல்லம் | <br><br>6.23கி.மீ<br>2.87கி.மீ<br><br>71.1 கி.மீ<br>5.7 கி.மீ<br><br>145.2 கி.மீ<br>11.24 கி.மீ<br><br>3.18 கி.மீ<br>173 மீ<br>09 எண் | <br><br>6.23 கி.மீ<br>2.68 கி.மீ<br><br>73.6 கி.மீ<br>1.0 கி.மீ<br><br>156.7 கி.மீ<br>2 கி.மீ<br><br>3.1 கி.மீ<br>17 மீ<br>05 எண் செயற் படுகின்றன 04 MPS செயற்பாட்டில் உள்ளன. | - சில எதிர்பாராத பிரதான தாமதங்கள் (ஊழியருக்கான காரணம்) பூர்த்தியாக்கலில் தாமதத்தை ஏற்படுத்தியது. அதாவது,<br>- ஆழமான அகழ்தல் பிரச்சனையில் குழாயிடல் காரணமாக பிரதான இறைக்கும் இல்லத்தை இடம் மாற்றல்.<br>- தேசிய செயற் திட்டங்களின் மெதலிய மற்றும் கிறிட்சிற்றி ஒருங்கிணைப்பு<br>- தலதா வீதிய குழாயிடலில் பொது மக்கள் எதிர்ப்பு (சமூக பிரச்சனை)<br>- கோவிட் - 19 நோய் தொற்று<br>- நாட்டின் எதிபாராத மூலப் பொருட் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நிலமை மற்றும் இரண்டும் சேர்ந்து ஒப்பந்தகரர் தாமதமும் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) வீட்டு இணைப்பு நிர்மாணம்<br>- நிர்மாணம்<br>- இறுதி இணைப்பு | <br>6,191<br>3,297 | <br>5,854<br>2,724 | -கவனத்திற் கொள்ளக்கூடிய பாரிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஊழியர் நடத்தையும் தமாதங்களை ஏற்படுத்தின அதாவது,<br>- திகன விபத்தினால் | செயற்திட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பொலீஸ் ஊடரங்கு காரணமாக வேலைகள். தடைபட்டன.

- கோவிட் - 19 நோய் தொற்று (பிரயாணத் தடை), கோவிட் - 19 நோய் தொற்றிலிருந்து பாதிக்கப்பட்ட ஒப்பந்தகாருடைய வேலைத்தளம் மற்றும் வேலைத் தளம் 14 நாட்கள் மூடப்பட்டமை மற்றும் பிரயாணத் தடை மற்றும் முடக்கப்பட்டமை.

### 4.2 ஒப்பந்த முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் பூர்த்தியாக்கப் பட்டிருக்காத போதிலும் கடன் அறவீடு 2020 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் என்பன காரணமாக கடனறவீடாக ரூபா 1,644.78 மில்லியன் கடனளிக்கும் முகவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தாமதங்கள் ஊழியரின் கட்டுப்பாட்டை பின்தள்ளி யிருந்ததுடன் இறுதி கொடுப்பனவுகளை செய்வதற்கு கடன் கைதவிர்ப்பு காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அமுலாக்கல் முகவரான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தாமதமில்லாமல் செயற்திட்ட செயலாற்றலை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் உடன்பட்ட கால அட்டவணையில் கடன் பயன்படுத்தாமை என்பன காரணமாக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 173.48 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்த பொதிகளின் பூர்த்தியாக்கல் தாமதப் பட்டிருந்தமையால், கடன் கைதவிர்ப்புக் காலம் நீடிப்பது அவசியமாக உள்ளது. | அமுலாக்கல் முகவரான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தாமதமில்லாமல் செயற்திட்ட செயலாற்றலை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உடப்பகுதி கழிவு வலையமைப்பு, கிளை கழிவகற்றல் மற்றும் பிரதான மான்கோல் என்பவற்றின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஒப்பந்தத்தின் வடிவமைப்பு வேலைகள் செயற்திட்டத்தால் முறையாக மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், ஒப்பந்தகாரர் ரூபா | 4.1 (அ) இல் குறிப்பிடப் பட்டவாறு நிர்மாணம் தாமதங்கள் மற்றும் மேலதிக கிரயங்களால் பாதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் ஏறத்தாழ ரூபா 5,056 மில்லியன் கோரியருந்ததுடன் ஆழமாக மதிப்பாய்வு செய்தமையால் இது ரூபா 1,750 மில்லியனிற்கு | செயற்திட்டமானது ஆரம்ப கட்டத்தில் வடிவமைப்பு வேலையை முறையாக மதிப்பாய்வு செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| 1,750 மில்லியன் கிரயத்தில் முரண் கட்டளை சமர்ப்பித்திருந்ததுடன் செயற்திட்டமானது மீளாய்வாண்டின் பொது மேலதிக வடிவமைப்பு கிரயமாக அதிலிருந்து ரூபா 52.12 மில்லியன் செலுத்தியிருந்தது. | குறைக்கப்பட்டது. |

**4.3 முரணான நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்ட பதவியணியில் இருக்கின்றோரை செயற்திட்டம் வேலைக்கு அமர்த்தியிருந்ததுடன் செயற்திட்ட நோக்கெல்லைக்குள் இருக்காத பேராதனை பல்கலைக்கழகத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி நிர்மாணத்திற்கான வீட்டு இணைப்பு நிர்மாண ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 13.02 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | பேராதனை பல்கலைக்கழ செயற்திட்டம் கண்டி கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்ட சுத்திகரிப்பு முறைமைக்கு இணைக்க வேண்டியுள்ளதுடன் செயறற்திட்ட அனுபவத்தை கருத்திற்கொண்டு இந்த செயற்திட்டம் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அக்கறையை சிறப்பாக முகாமை செய்வதற்கு அதே கோமைத்துவக் குழுவால் முகாமை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நோக்கெல்லைக்குள் கொடுப்பனவ செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ஒன்லைனில் நடைபெற்ற கண்டி கழிவு நீர் சுத்திகரிப்பு பொறி திறப்பு விழாவிற்காக செயற்திட்டதிற்கு ரூபா 2.6 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | இது உடனுக்குடன் நேரடியாக இருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பொது மக்களிற்கு தெரிவிப்பது அவசியமாக இருந்தது. | செயற்திட்டமானது செலவினத்தை வினைத்திறன், ஆக்கபூர்வம் மற்றும் சிக்கனமாக முகாமை செய்யப்பட வேண்டும். |

**4.5 முறைமையளும் கட்டுப்பாடுகளும்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்தவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகம் உள்ளக கணக்காய்வாளர் நியமனத்தை கையாள்வதுடன் 2019 ஆம் ஆண்டு தொடர்பான ஆவணங்கள் உள்ளக கணக்காய்வாளரால் கோரப்பட்டு உரிய ஆவணங்கள் உள்ளக கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்டது. | உள்ளக கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு, மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வுக்கு உடபடுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.6 முன்னைய கணக்காய்வு அறிக்கையல் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| தெய்யனெவெலவில் இறைக்கும் இல்ல நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் மஹமாய ஆரம்ப பாடசாலைக்கு அருகில் இறைக்கும் இல்லத்தின் நிர்மாணம் செயற்பாட்டில் உள்ளது. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு காணிகளின் உரிமையாண்மை மாற்றப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் தாமதமில்லாமல் காணியின் உரிமையாண்மையயை மாற்றி பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

*M*